**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.187/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பவித்ரன் | Prosecution | P.W-3, L.W-3 |
| Father Name | பாலமுருகன் | Defence | |
| Village | சிவன் கோயில் தெரு, காப்பியக்குடி | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 20/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day
14.02.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து ஹோட்டலில் பணி செய்து வருகிறேன். அசா.1 எனது அப்பா. அசா.2 எனது அம்மா. ஆஜர் எதிரிகளையும் 3 வது எதிரி சரண் என்பவரையும் எனக்கு தெரியும் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். கடந்த 16.02.2020 அன்று மாலை 5.45 மணிக்கு என் அப்பா பால் வாங்க அரசூர் சென்றிருந்தார். எனது அப்பா புகையிலை போடும் பழக்கம் இருப்பதால் பால் வாங்க செல்லும் போது எச்சில் துப்பிவிட்டு சென்றுள்ளார். 1 வது எதிரி சத்தியமூர்த்தி அக்காவை பார்த்து தான் எச்சில் துப்பினார் என்று கூறி எனது பெரியம்மாவிடம் சொல்லியுள்ளார். அப்போது என் அப்பா பால் வாங்கிவிட்டு திரும்பி வந்து விட்டார் . என் பெரியம்ா என் அப்பாவிடம் கேட்டுக்கொண்டிருந்த போதே சத்தியமூர்த்தியின் அக்கா சென்றுவிட்டார். சர்மா, சரண் .சத்தியமூர்த்தி மூவரும் அறுவாளை எடுத்து வந்து சரணும் சத்தியமூர்த்தியும் என் அப்பாவை தலையில் வெட்டினார்கள். தடுக்க சென்ற என் அம்மாவை சர்மா தலையில் அறிவாளால் வெட்டினார். அதை பார்த்து நான் தடுக்க சென்ற போது சரணும் சர்மாவும் கட்டையால் என்னை தலையிலும் கையிலும் அடித்து தேவுடியா குச்சிக்காரி மகனே என்று அசிங்கமாக திட்டி என்னை கீழே போட்டு அடித்து வெளியே தள்ளிவிட்டு குடும்பத்தோடு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். அதன் பின்னிட்டு என் அம்மாவையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிதம்பரம் RMMCH க்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். என்னை என் நண்பர்கள் சிகிச்சைக்காக அழைத்து

சென்றார்கள் அங்கு நான் 3 நாட்கள் எடுத்துக்கொண்டேன். என் அப்பா, அம்மா 20 நாட்கள் சிகிச்சை எடுத்து கொண்டு மேல் சிகிச்சைக்காக என் அப்பாவை மட்டும் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவ மனைக்கு அழைத்து சென்றோம். அங்கு சிகிச்சை எடுத்து கொண்டு மீண்டும் RMMCH யில் சிகிச்சை பெற்று சீர்காழி GH யிலும் சிகிச்சை எடுத்துக்கொண்டார். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**1, 2 எதிரிகள் ஆஜர் 3 எதிரி ஆஜரின்மைக்காக அனுமதிக்கப்பட்டது**
**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.187/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பாரதி | Prosecution | P.W-2, L.W-2 |
| Father Name | க/பெ. பாலமுருகன் | Defence | |
| Village | சிவன் கோயில் தெரு, காப்பியக்குடி | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 42/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.02.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். அசா.1 எனது கணவர். ஆஜர் எதிரிகளையும் 3 வது எதிரி சரண் என்பவரையும் எனக்கு தெரியும் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். கடந்த 16.02.2020 அன்று மாலை 5.45 மணிமுதல் 6.00 மணிக்குள் என் கணவர் பால் வாங்க அரசூர் சென்றிருந்தார். என் கணவர் 1 வது எதிரியின் அக்கா விஜயகுமாரியை பார்த்து எச்சில் துப்பி விட்டார் என்று எனது கணவரின் உடன் பிறந்த அண்ணன் மனைவியிடம் விஜயகுமாரி சொன்னார் . மேற்படி விபரத்தை என் ஓப்பிடியா என்னிடம்சொன்னார். பின்னர் எனது கணவர் பால் வாங்கி கொண்டு திரும்பி வந்த பின்னிட்டு நாங்கள் அவரிடம் கேட்டோம். பேசிக்கொண்டிருந்த போதே என் கணவர் தலையில் சத்தியமூர்த்தியும் சரனும் அறிவாளை எடுத்து வந்து வெட்டினார்கள். அதை நான் தடுக்க சென்ற போது சர்மா என் தலையில் அறிவாளால் வெட்டினார். எனது மகன் தடுத்த போது எதிரிகள் மூவரும் கம்பால் தாக்கினார்கள். அதில் என் மகனுக்கு கண்ணம், முதுகு வீக்க காயம் ஏற்பட்டது. அதன் பின்னர் எங்களை என் ஓப்பிடியார் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிதம்பரம் RMMCH க்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். அங்கு 20 நாட்கள் சிகிச்சை எடுத்து கொண்டு மேல் சிகிச்சைக்காக என்

கணவரை மட்டும் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவ மனைக்கு அழைத்து சென்றோம். அங்கு சிகிச்சை எடுத்து கொண்டு மீண்டும் RMMCHயில் சிகிச்சை பெற்று சீர்காழி GH யிலும் சிகிச்சை எடுத்துக்கொண்டார். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் ஆஜர் 3 எதிரி ஆஜரின்மைக்காக அனுமதிக்கப்பட்டது**

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# SIRKALI
## DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.187/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பாலமுருகன் | Prosecution | P.W-1, L.W-1 |
| Father Name | பெரியகுஞ்சு | Defence | |
| Village | சிவன் கோயில் தெரு, காப்பியக்குடி | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 44/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **14.02.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து எலட்ரிசியனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளையும் 3 வது எதிரி சரண் என்பவரையும் எனக்கு தெரியும் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். கடந்த 16.02.2020 அன்று மாலை 4.45 மணிக்கு நான் பால் வாங்க அரசூர் சென்றேன் எனக்கு புகையிலை போடும் பழக்கம் இருப்பதால் நான் அடிக்கடி எச்சில் துப்பிக்கொண்டிருப்பேன். பின்னர் பால் வாங்கி கொண்டு திரும்பி வரும்போது எதிரி சத்தியமூர்த்தி அக்கா நான் அவர் வீட்டு அருகில் எச்சில் துப்புவதாக எனது அண்ணன் மற்றும் அண்ணியிடம் கூறிக்கொண்டிருந்த போது எதிரிகள் சத்தியமூர்த்தி மற்றும் சரண் என்னை அசிங்கமாக குச்சிக்காரி மகனே தேவிடியா மகனே என்று திட்டி கொண்டிருக்கும் போதே எதிரிகள் சத்தியமூர்த்தி மற்றும் சரண் என் தலையில் அறிவாளால் வெட்டினார்கள். சரனும் சத்தியமூர்த்தியும் என் மனைவியை அடித்தார்கள். மேலும் என் மனைவியை சர்மா என்பவர் அறிவாளால் வெட்டினார். அதில் என் மனைவிக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது மகன் பவித்திரனை கம்பால் சர்மா அடித்தார். உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்ற எதிரி சத்தியமூர்த்தி என்னை மிரட்டினார். எனக்கு தலையில் வெட்டு காயம் ஏற்பட்டதால் அடுத்து என்ன நடந்தது என்று எனக்கு நினைவில்லை. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னை சிதம்பரம் RMMCH க்கு நான் என் மனைவி மற்றும் மகன் மூவரையும் என் அண்ணன் மனைவி மற்றும் உறவினர்கள் மூலம் அழைத்து சென்றார்கள். அங்க நானும் என்

மனைவியும் உள்நோயாளியாகவும் என் மகன் மட்டும் வெளி நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். சிதம்பரம் RMMCH யில் சிகிச்சையில் இருந்த போது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காண்பிக்கபடும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும் அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் மேல் சிகிக்சைக்காக என்னை பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு நான் 2 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். தலையில் எனக்கு ஏற்பட்ட காயத்தினால் தற்போது வரை நான் திடீரென மயங்கி கீழே விழுந்து விடுவேன் அதனால் வேலை எதுவும் செய்ய முடிவதில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் ஆஜர் 3 எதிரி ஆஜரின்மைக்காக அனுமதிக்கப்பட்டது**

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**